பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 2 சனிக்கிழமை 09.04.2022 கதிர் 24

## ஜனாதிபதி விசேட உரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், அடுத்த வாரம் நாட்டு மக்களுக்கு அவர் விசேட உரை யாற்றவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

☞2

# ஜனாதிபதி செயலகம் முற்றுகை!

## காலிமுகத்திடலில் தன்னெழுச்சிப் போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகம் முற்றுகையிடப்பட்டுள்ளது. அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்தி இன்று காலை முதல் காலிமுகத்திடல் வளாகத்தில் தன்னெழுச்சிப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவானோர் வருகை தந்துள்ளனர்.

இந்நிலையிலேயே காலிமுகத்திடலை

☞2



# மக்களின் குரலுக்குச் செவிசாய்க்கவும்; போராட்டங்களை ஒடுக்கவே வேண்டாம்

## இலங்கை அரசிடம் ஐ.நா. வலியுறுத்து

**இலங்கையில் நடத்தப்பட்ட மக்களின் ஜனநாயகப் போராட்டங்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. மக்களின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.**

**ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியான ஒன்றுகூடல் மற்றும் சங்கத்தின் சுதந்திரத்துக்கான உரிமைகள் பற்றிய சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ட் நியாலெட்சோசி வோல் உட்பட்ட 6 நிபுணர்கள் இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.**

☞2



# 11 ஈரான் மீனவர்கள் கைது

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் வண்ணாரப்பேட்டை மாவட்டத்துக்கும் அந்தமான் தீவுக்கும் அருகே எல்லை தாண்டி மீன்பிடித்த ஈரான் நாட்டைச் சேர்ந்த 11 பேரை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

இன்று காலை கைதுசெய்யப்பட்ட ஈரான் நாட்டுப் படகு தற்போது என்.04 மீன்பிடித்துறைமுகத்தில்

☞2



# 'அனோனிமஸ்' ஹக்கர்கள் அணி ராஜபக்ஷக்களுக்கு எச்சரிக்கை!

உலகின் மிக பயங்கரமான கணனி ஹக்கர்கள் அணி எனக் கூறப்படும் 'அனோனிமஸ்' அணியினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர் எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி 14 நாள்களுக்குள் பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும், அதிகாரங்களைப் புதியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அப்படி செய்யவில்லை என்றால், ராஜபக்ஷ குடும்பத்தின் அனைத்துத்

☞2

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் மன்னாரில் கைது!

சுமார் ஒரு கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.



நேற்றுக் காலை தலைமன்னார் வடக்கு கடற்பரப்பில் படகொன்றில் இருந்து இந்த ஐஸ் போதைப்

☞2

# நெருக்கடிக்குத் தீர்வு முன்வைக்காவிட்டால் தனியார் துறைகளும் மூடப்படும் அபாயம்!

## ரணில் எச்சரிக்கை

நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்கு நம்பிக்கை ஏற்படும்வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை மே மாதத்தின் பின்னர் தீவிரமடைந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் இல்லாது போகலாம். அதனால் ஜூலை மாதமளவில் தனியார் துறைகளும் மூடப்படலாம் என்று தெரிவித்த அவர், விரைவில் தீர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சபையில்

☞2



# டலஸைப் பிரதமராக நியமிக்கத் திட்டம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, டலஸ் அழகப்பெருமவை பிரதமராக நியமிக்கும் திட்டத்தை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று முன்னெடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது.

சிங்கள ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

விமல் வீரவன்ஸவின் தரப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அணியினரும், அனுரபிரியதர்ஷன யாப்பா தலைமையிலான குழுவினரும் இதற்கான நகர்வுகளில் இறங்கியுள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பிரதமர் பதவிக்கு ஐந்து பேரின்

☞2

# பிச்சைக்காரர்களிடம் பிச்சை எடுக்கும் நிலை

## பேராயர் பெரும் விசனம்

நாட்டிற்கு பெரிய மாற்றத்துடன் புதிய தொடக்கம் தேவை எனக் கொழும்புப்பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

☞2



## 'அனோனிமஸ்' ஹக்கர்கள் அணி ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தகவல்களையும் வெளியிடப் போகின்றார்கள் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

அனோனிமஸ் என்ற இந்த அணியினர் உலகில் பிரபலமான தலைவர்கள் மறைத்து வைத்துள்ள சொத்துக்களின் விவரங்களை வெளியிட்ட அணியினர் எனக் கருதப்படுகிறது.

பன்டோர ஆவணங்கள், பனாமா ஆவணங்கள், விக்கிலீக்ஸ் என கடந்த காலங்களில் உலகில் அதிர்ச்சிகளை ஏற்படுத்தும் தகவல்களை இந்த அணியினரே வெளியிட்டுள்ளனர்.

இந்த அணியினர் ஏற்கனவே உக்ரைன் நாட்டுக்குள் நுழைந்த ரஷ்ய படையினரின் தகவல்கள், பெயர்கள், படங்கள் ஆகியவற்றை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 11 ஈரான் மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

சென்னை ஐயம்பாக்கதில் உள்ள அலுவலர்கள் ஈரானிய படகைச் சோதனை செய்த பின் அதிலிருந்தவர்களை ஸ்டான்லி மருத்துவ சோதனைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

## மக்களின் குரலுக்குச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் அமைதியான போராட்டங்களின்போது கருத்து வெளியிடுவதற்கான அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அவசரகால பிரகடனம் மற்றும் சமூக ஊடக தளங்களுக்கான தடையுத்தரவு ஆகியவை தொடர்பில் நாம் கவலைப்படுகின்றோம்.

இந்தச் செயற்பாடுகள், மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள், மின்சாரம், மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கிடைக்காதமையால் மேற்கொள்ளப்படும் அமைதியான போராட்டங்களின் நோக்கத்தைக் குறைப்பது அல்லது தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

போராட்டக்காரர்களைக் கலைக்க கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பீரங்கிகளை அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை கண்டிக்கத்தக்கவை.

இந்தநிலையில் மாணவர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பிறரை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றோம். அவர்கள் தமது அரசியல் கருத்துக்களை சுதந்திரமாகப் பகிர்ந்துகொள்ளவும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தவும் அனுமதிக்கவேண்டும்.

தடைகளை விடுத்து இலங்கை மக்களுடன் ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலில் ஈடுபடுமாறு இலங்கை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம் – என்றனர்.

## ஜனாதிபதி செயலகம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அண்மித்த பகுதியில் உள்ள ஜனாதிபதி செயலகம், போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

சுமார் பத்துப் பதினைந்தாயிரம் பொதுமக்கள் அப்பகுதியில் திரண்டுள்ளனர். எனினும் காலிமுகத்திடல் ஊடான போக்குவரத்துகள் நடக்கின்றன.

இன்று காலிமுகத் திடல் பகுதியில் கூடியுள்ளவர்கள் அப்பகுதியில் தொடர்ந்து அங்கு நிலை கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதேசமயம் அப்பகுதியில் சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டிருக்கின்றன என ஒரு தகவல் தெரிவித்தது.

## ஜனாதிபதி விசேட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வாறு இல்லாவிட்டால் ஊடகப் பிரதானிகளை அழைத்து, விசேட ஊடக சந்திப்பொன்றை நடத்துவார் எனவும் அறிய முடிகின் றது.

அதேவேளை, புதிய அமைச்சரவையை நியமிப்பது பற்றியும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

## ஐஸ் போதைப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொருள் கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக நம்பப்படும் போதைப்பொருள்களின் பெறுமதி சுமார் 76 லட்சம் ரூபா என நம்பப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நெருக்கடிக்குத் தீர்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போது நானும் சுமந்திரனும் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பான இந்த விவாதம் நடைபெறுகின்றது.

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன கூறுவதைப் போன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிதி முகாமைத்துவ வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு உள்ளிட்ட விடயங்களே மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. அதேவேளை நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்திடமே உள்ளது. சபை அந்த அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். நிதி நிர்வாகம் தொடர்பான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

நாட்டில் இவ்வாறான நிலைமை உருவாவதற்கான காரணம் என்ன என்று தேடிப்பார்த்து அதனுடன் தொடர்புடைய நபர் யார் என்று கண்டறிந்து அவருக்குத் தண்டனை வழங்க நாடாளுமன்றத்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தைத் திருத்தி நிவாரணம் வழங்கும் வகையிலான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அரச நிதி குழுவின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் - என்றார்.

## டலஸைப் பிரதமராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெயர்களைப் பரிந்துரைத்திருந்த இந்த குழு, டலஸ் அழகப்பெருமவுக்கு முன்னுரிமை வழங்கத் தீர்மானித்துள்ளது.

## பிச்சைக்காரர்களிடம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீர்கொழும்பில் இன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கர்தினால் இதனைத் தெரிவித்துள்ளார்.

இப்போது நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்ந்து நாடகம் ஆடுவதைப் பார்க்கிறோம்.

இன்று நாட்டிற்கு ஒரு பெரிய மாற்றம் தேவை. இப்போது நமது வெளியுறவு அமைச்சரும் நமது நிதி அமைச்சரும் சென்று சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்க வேண்டும்.

நாம் வேறு நாடுகளுக்குச் சென்று கைநீட்டி பிச்சை எடுக்க வேண்டும். இந்தியாவைச் சேர்ந்த பிச்சைக்காரர் ஒருவர் தான் வசூலித்த பணத்தில் சிலவற்றை இலங்கைக்குக் கொடுக்கிறார் என நேற்று பத்திரிகையில் பார்த்தேன். அதாவது பிச்சைக்காரர்களை விட மோசமான நிலைக்கு விழுந்துவிட்டோம்.

இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது. இந்த அமைப்பை மாற்ற இந்த நாட்டின் அனைத்து குடிமக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.










# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## செய்ய வேண்டியவை அதிகம்

இலங்கைத்தீவு முழுவதிலுமே பொருளாதார நெருக்கடி பற்றி எரிகின்றது. அத்தியாவசியப் பொருள்களின் கண் மண் தெரியாத விலையேற்றம் மக்களை மலைக்க வைத்துள்ளது. அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்று தெரியாத இக்கட்டில் மக்கள் முடங்கிப்போய் உள்ளனர்.

நெருக்கடிகளைத் தாங்க முடியாத தென்னிலங்கை மக்கள் வீதிக்கு வந்து விட்டனர். முழு நாட்டையும், அதன் பொருளாதாரத்தையும், சூறையாடி தம்மை வீதிக்குக் கொண்டு வந்தவர்கள் ராஜபக்ஷக்களே என்று மக்கள் சீற்றம் கொண்டு போராட்டங்களில் இறங்கி உள்ளார்கள்.

இந்த நிலைமையை தமிழ் மக்கள் – தமிழர் தேசம் – எப்படி எதிர்கொள்வது, என்ன பிரதிபலிப்பைக் காட்டுவது, எப்படி அடுத்த கட்டத்தை முன்னெடுப்பது என்ற குழப்பம் நீடிக்கும் இச்சமயத்தில் ஐந்து தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி கலந்துரையாடி இருக்கின்றன.

இந்த நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை ஒன்று கூட்டும்படி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டம் கூட்டப்படவில்லை.

அதன் பின்னர் நான்கு, ஐந்து நாள்களில் தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனான ஒரு கூட்டத்தை ரெலோவும் சேர்ந்து அழைத்து, அதில் பங்குபற்றியிருக்கின்றது. தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றின் தலைவர்களும் அதில் பங்குபற்றியுள்ளனர். கட்சித் தலைவர்கள் மட்டத்தில் நடந்த அந்தக் கூட்டத்தில் தமிழரசு தலைவர் மாவை சேனாதிராஜா பங்குபற்றவில்லை.

தமிழர்கள் தரப்பு இந்த நெருக்கடி நிலை தொடர்பாக எத்தகைய அணுகு முறையை பின்பற்ற வேண்டும் என்பது சம்பந்தமாகத் தெளிவுபடுத்தி, வழிப்படுத்தி முதல்கட்டமாக ஓர் அறிக்கையை வெளியிடுவதற்கு அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

நாட்டில் எதேச்சதிகார ஆட்சிக்கு வழி செய்து, நாட்டின் செழிப்பையே புரட்டிப்போட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கு சமாதி கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றுபட்டு முன்வைக்க வேண்டும் என்ற கருத்தியல் அந்த அறிக்கை ஊடாக வெளிப்படுத்தப் படும் என முற்கொண்டு வெளியான செய்திகள் தெரிவித்தன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும் அது என்பதால், நேற்றைய கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் பங்குபற்றா விட்டாலும் இன்று வெளியாகக் கூடிய கூட்டு அறிக்கையில் அக்கட்சியின் சார்பில் அவரும் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆக, இன்றைய நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒப்பமில்லாமல், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து வெளியிடும் கூட்டறிக்கையாக – தமிழர்களின் ஏகோபித்த நிலைப்பாடாக – அந்த அறிக்கை அமைவதற்கு சாத்தியங்கள் உண்டு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்தக் கூட்டறிக்கை விடயங்களுக்கு ஒப்புதல் அளித்தால், அது முழுமையாக ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் தேசிய நிலைப்பாடாகும் அமைய வாய்ப்பு உண்டு. எனினும் ஒரு விவகாரம் கவனிக்கப்பட வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல், இந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வருதல் எல்லாம் இப்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான ஆரம்ப அடிகள்தான். இவற்றைத் தாண்டி, பல விடயங்கள் செய்யப்பட வேண்டி இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

# தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் தலைதூக்க போகிறது

## ஆனந்தசங்கரி நம்பிக்கை

இருபது ஆண்டுகளாக நேர்மையாக– நியாயமான அடிப்படையில் செயற்பட்டு வந்தாலும் அடங்கி ஒடுங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, மீண்டும் தலைதூக்க போகின்றது என அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே வீ.ஆனந்தசங்கரி இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்கள் மீண்டும் ஆதரவு தரவேண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் கூடி தீர்க்கமான முடிவுகளை எடுத்துள்ளது. – என்றார்.

சமகால நிலைமைகளை மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் தற்போதைய நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆடம்பர செயற்பாடுகளைக் கைவிட வேண்டும். மதரீதியாக ஜனாதிபதி செயற்பட்டாலே இந்த நிலை ஏற்பட்டது. ஜனாதிபதி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இனப்பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும்.ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. சிங்கள மக்களையும் அரசாங்கத்தையும் மோத விட்டு நாங்கள் வேடிக்கை பார்க்கக் கூடாது. அது தவறு. எல்லோருக்கும் உள்ள பொதுப் பிரச்சினையை தீர்க்க நாம் வழியை தேட வேண்டும் என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி பிரச்சினைகளுக்குதீர்வைக்காண்க!

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் ஆகியவை இடம்பெற்றால் அவை ஜனநாயகத்தின் இரு தூண்கள் என உறுப்பு நாடுகளின் கூட்டு அறிக்கையூடாக ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அனைவரும் நிதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவசரகால நிலை பிரகடனம் ரத்து செய்யப்பட்டமை சாதகமான நடவடிக்கை என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் ஜனநாயக வழிகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

# நிதியமைச்சின் புதிய செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

நிதியமைச்சின் புதிய செயலாளர் எம். மஹிந்த சிறிவர்தன நேற்று (வெள்ளிக்கிழமை) கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இவர் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகவும் அதன் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிர்வாக இயக்குநராக பணியாற்றியுள்ளார்,

அத்தோடு, நிதி அமைச்சின் நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் எம். மஹிந்த சிறிவர்தன பணியாற்றியுள்ளார்.

# சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுமாறு ஜெய்சங்கரிடம் ஸ்டாலின் கோரிக்கை



பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவுமாறு மத்திய அமைச்சர் ஜெய்சங்கரிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை வியாழக்கிழமை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட முதலமைச்சர், இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது நிலவும் தீவிர பொருளாதார நெருக்கடியில் சிக்கி, வேதனையில் தவித்துக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் வசிக்கும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும்தலைநகர்கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி தமிழக அரசு அத்தியாவசியப் பொருள்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருள்களை உணவின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் விநியோகிக்க உரிய அனுமதியையும் ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமரை கடந்த 31ஆம் திகதி சந்தித்து, தான் முன்வைத்த கோரிக்கைகளை நினைவுகூர்ந்த முதலமைச்சர், அந்தக் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி அளித்தார் என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# கலிபோர்னியாவில் இரு குழுக்களிடையே துப்பாக்கிச் சூடு; 6 பேர் பரிதாபமாக சாவு



அமெரிக்காவின் - கலிபோர்னியா மாகாண தலைநகரான சாக்ரமெண்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டமையுடன், 12 பேர் காயமடைந்தனர் என சாக்ரமெண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நகரத்தில் இரு குழுக்களுக்கு இடையே வெடித்த மோதலைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் கொல்லப்பட்டனர் என சாக்ரமெண்டோ நகர பொலிஸ் பொறுப்பதிகாரி கதி லெஸ்டர் கூறினார். எனினும் துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர்கள் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய எந்த விவரங்களையும் அவர் வெளியிடவில்லை. துப்பாக்கிக் குண்டுகள் அருகிலுள்ள கட்டடங்களையும் தாக்கின. சம்பவ இடத்தில் இருந்து படுகொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது. இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர் என சாக்ரமெண்டோ நகர பொலிஸ்பொறுப்பதிகாரிலெஸ்டர்கூறினார்.

ரோந்து சென்ற பொலிஸார் அதிகாலை 2 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு பெருமளவானவர்கள் கூடி பாதிக்கப்பட்டவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டனர் என அறிவிக்கப்பட்டது. உள்ளூர் கே.சி.ஆர்.ஏ. செய்தி சேவை வெளியிட்ட ஒரு வீடியோவில் சில இளைஞர்கள் முதலில் தெருவோரத்தில் நின்று மோதிக்கொள்வது பதிவாகியுள்ளது. அதன் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டு, அங்கிருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு ஓடியதைக் காண முடிகிறது. இந்த வீடியோவில் சுமார் 76 தடவைகள் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்நிலையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்த தகவல்கள் தெரிந்தவர்கள் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு சாக்ரமெண்டோ நகர பொலிஸ் பொறுப்பதிகாரி லெஸ்டர் கோரியுள்ளார். கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கா முழுவதும் துப்பாக்கி வன்முறை அதிகரித்து வருகிறது. கொவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவுகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த ஆண்டு இதுவரை அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டு வன்முறைச் சம்பங்களில் 17,000க்கும் மேற்பட்டவர்கள் இறந்து மற்றும் காயமடைந்துள்ளனர் என வன்முறைகளைக் கண்காணிக்கும் அரச சார்பற்ற அமைப்பு ஒன்றின் தரவுகள் தெரிவிக்கின்றன.



கனடா பழங்குடி பள்ளிகளில் நடந்த அநீதிகளுக்காக

# மன்னிப்புக் கோரினார் போப் பிரான்சிஸ்!

கனடாவில் கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்பட்ட பழங்குடியின குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடியின சிறுவர்களுக்கு இடம்பெற்ற அநீதிகளுக்காக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் மன்னிப்பு கேட்டுள்ளார்.

பழங்குடியின சிறுவர்களுக்கு இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் நான் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி இருக்கிறேன் என்பதை என் இதயத்தில் இருந்து உங்களுக்கு கூற விரும்புகிறேன். கனடா பேராயர்களுடன் இணைந்து இதற்காக நான் மன்னிப்பு கோருகிறேன் என வத்திகானில் நேற்று பொதுமக்கள் மத்தியில் பேசிய போது போப் பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

விரைவில் தான் கனடா செல்ல உள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் பல தசாப்தங்களாக நீடித்த குடியிருப்பு பள்ளி முறைமையின் கீழ் கலாசார இனப்படுகொலை இடம்பெற்றதாக 2015 ஆம் ஆண்டில், கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிவித்தது. 1870 முதல் 1990 களுக்கும் இடையில், 150,000 க்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகள் குடியிருப்புப் பள்ளிகளில் இணைய கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தப்பள்ளிகள் தேவாலயங்களால் நடத்தப்பட்டன. பழங்குடி குழந்தைகளை வெள்ளை கனேடிய சமுதாயத்தில் வலுக்கட்டாயமாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறான பள்ளிகள் செயற்பட்டன.

குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் மொழிகளைப் பேச முடியாது தடை ஏற்படுத்தப்பட்டது. மேலும் இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகள் பலவிதமான உடல், உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்தனர்.

கனடாவின் முன்னாள் குடியிருப்பு பள்ளி வளாகங்களில் சுமார் 1,000 வயையான பழங்குடிச் சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இது இந்த விவகாரத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த அநீதிகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவர் பிரான்சிஸ் மன்னிப்பு கோர வேண்டும் என்ற கோரிக்கைகள் கனடாவில் வலுவடைந்து வந்தன.

இந்த விவகாரத்தில் போப் பாண்டவர் மன்னிப்புக் கோர வேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி தடை ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்தது

ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதிக்கு பெரும்பாலான நாடுகள் தடை விதித்தைத் தொடர்ந்து, தற்போது ரஷ்யாவில் இருந்து நிலக்கரி இறக்குமதியை தடை செய்ய ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் கூறுகையில், 'நிலக்கரி மீதான தடையால் ஒரு வருடத்திற்கு 440 பில்லியன் டொலர் மதிப்பு கொண்ட வர்த்தகத்தை ரஷ்யா இழக்கும். எனினும் புதிய ஒப்பந்தங்களைத் தடை செய்வதற்கு முன் மூன்று மாத கால அனுமதி வழங்கப்படும். ஒப்பந்தபடி ஏற்கெனவே ரஷ்யா அனுப்பி விட்ட நிலக்கரிக்கும் இந்த தடை பொருந்தாது.

ஐரோப்பிய ஒன்றியம் நாடுகளைச் சேர்ந்த தூதர்கள் விவாதித்து இதற்கான செயற்திட்டத்தை உருவாக்குவார்கள். பெரும்பாலான ரஷ்ய ட்ரக்குகள் மற்றும் கப்பல்கள்நுழைவதை தடை செய்யும் உத்தரவையும் ஐரோப்பிய ஒன்றியம் முன்



மொழிகிறது. அதேசமயம் விவசாய பொருள்கள், மனிதாபிமான எரிபொருள் உதவிக்கு விதிவிலக்கு வழங்கப்படும்' என கூறினார்.

ரஷ்யாவின் எரிபொருளை தடை செய்யும் ஐரோப்பிய ஒன்றிய முயற்சிகளை முன்பு தடுத்த ஜேர்மனி, ரஷ்ய நிலக்கரி தடையை பரிசீலிக்கத் தயாராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தடை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விவாதித்து வருவதாகவும் தெரிகிறது.

வடமேற்கு ஐரோப்பாவிற்கு, ரஷ்யா தெர்மல் நிலக்கரியில் பாதியை வழங்குகிறது. இதன் மூலமே அங்குள்ள மின் நிலையங்களுக்கு எரிபொருளாகவும் மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. நிலக்கரி விலை 7.9 சதவீதம் உயர்ந்து இதில் ஜேர்மனி மற்றும் ஹங்கேரி உட்பட பல அரசுகள் ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் வாங்க தடை விதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ரஷ்ய எண்ணெயை படிப்படியாக மட்டுமே குறைக்க முடியும் என இந்த நாடுகள் தெரிவித்து வருகின்றன.

## சூடான் ஆயுதக்குழு தலைவருக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை



சூடானில் 20 ஆண்டுகளுக்கு முன்பு போர்க்குற்றத்தில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டப்படும் அந்த நாட்டு ஆயுதக் குழு தலைவர் அலி முகமது அப்துல் அல்-ரஹ்மான் மீதான வழக்கு விசாரணை நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (Internati onal Criminal Court) செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கடந்த 2003 ஆம் ஆண்டில் சூடானைச் சோந்த பழங்குடியினர் அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அதனை அடக்குவதற்காக சூடான் அரசு அவர்கள் மீது கடுமையான வான்வழித் தாக்குதல் நடத்தியது.

அத்துடன், அரசுக்கு ஆதவாக செயல்பட்டு வந்த அல்-ரஹ்மான் தலைமையிலான ஜன்ஜாவிது ஆயுதக் குழுவினர், பழங்குடியினர் கிராமங்களுக்கு அதிகாலை சென்று தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என கூறப்படுகிறது.

கொலை, கொள்ளை, பாலியல் தாக்குதல், சித்திரவதை ஆகியவற்றில் அல்-ரஹ்மானின் ஆயுதக் குழு ஈடுபட்டதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதுதொடாபாக அல்-ரஹ்மான் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஐ.நா. பாதுகாப்பு சபையில் கடந்த 2005 ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, தற்போது வழக்கு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதில் பங்கேற்ற அல்-ரஹ்மான், தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தையும் மறுக்கிறேன் என கூறினார்.

# ஐந்து மாநிலங்களில் அதிகரிக்கும் கொரோனா இந்திய மத்திய சுகாதாரத் துறை எச்சரிக்கை



இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அண்மைய தரவுகள் தெரிவித்து வந்தன. தினசரி பாதிப்பு கடந்த சில நாள்களாகவே ஆயிரம் என்ற அளவிலேயே காணப்பட்டது. தொற்றுப் பரவல் குறைந்து வருவதால், பல மாநிலங்களில் முகக்கவசம் அணிதல் போன்ற கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஐந்து மாநிலங்களில் தொற்றுப் பாதிப்பு அதிகரித்துள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை செயலர் ராஜேஷ் பூன், கேரளா, மிசோரம், மராட்டியம், டெல்லி மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில், கொரோனா வழிகாட்டுதல்களை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கேரளாவில், கடந்த வாரத்தில் 2,321 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்தியாவில் கடந்த வாரத்தில் பதிவான மொத்தப் பாதிப்பில் இது 31.8 சதவீதம் ஆகும். அதேபோல், இந்தியாவில் வாராந்திர பாதிப்பு விகிதம் 13.45 சதவீதத்தில் இருந்து 15.53 சதவீதமாக உயர்ந்துள்ளமையும் தரவுகளின் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

## பாலியல் வழக்கில் கைதான சிவசங்கர் பாபாவுக்கு நிபந்தனைப் பிணை வழங்கியது சுப்ரீம் கோர்ட்



சென்னையில் பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் சிவசங்கர் பாபா கைதுசெய்யப்பட்டுசிறையில்அடைக்கப்பட்டார். இவர் தனக்கு பிணை வழங்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது, விசாரணை மேற்கொண்ட நீதிபதி சிவசங்கர் பாபாவுக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கி உத்தரவிட்டார்.

அவர் தனது பாடசாலை, ஆசிரமம் போன்ற இடங்களுக்குச் செல்லக்கூடாது என்றும், சாட்சியங்களைக் கலைக்க முயன்றால் பிணை மனு ரத்துச் செய்யப்படும் என்றும் அவர் எச்சரிக்கைவிடுத்தார்.



## 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி தனியார் மையங்களில் வழங்க மத்திய அரசு அனுமதி

நாளை 10 ஆம் திகதி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொள்ள இந்திய மத்தியஅரசுஅனுமதிஅளித்துள்ளது. தனியார் மையங்களில் இத்தகைய முன்னெச்சரிக்கை பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளலாம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை கட்டணம் செலுத்தியே செலுத்திக்கொள்ள முடியும் என மறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் ஆகியோருக்கு தற்போது அரசாங்கத் தடுப்பூசி மையங்களில் செலுத்தப்பட்டு வரும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் எனவும் இந்திய மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிர்பூம் வன்முறை வழக்கில் மும்பையில் கைது செய்யப்பட்ட நான்கு நபர்கள் கொல்கத்தாவுக்கு கொண்டுசெல்லப்பட்டனர்



திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் பகதூர் ஷேக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து, மேற்கு வங்க மாநிலம் பீர்பூம் மாவட்டம் ராம்பூர்ஹாட் பகுதியில் உள்ள போக்டுய் கிராமத்தில் கடந்த மார்ச் 21 ஆம் திகதியன்று ஒரு கும்பல் வீடுகளுக்குத் தீ வைத்தது. இதில் எட்டு பேர் எரித்துக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம்,இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இதுதொடர்பான வழக்கினை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. வன்முறையில் ஈடுபட்டவர்களையும் பொலிஸார் தேடி வந்தனர். இந்த நிலையில், வன்முறையில் ஈடுபட்டு தப்பிய குற்றவாளிகள் 4 பேரை சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தமையையடுத்து நேற்று அவர்கள் காலை கொல்கத்தாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

வன்முறையைத் தொடர்ந்து தப்பியோடிய பாப்பா, ஷாப்பு, தாஜ் முகமது மற்றும் செராஜுல் ஆகிய நான்கு பேர் மும்பையில் கைது செய்யப்பட்டனர். கைது செய்த நால்வரிடமும் விசாரணையை விரைவுபடுத்துவதற்காக நாங்கள் அவர்களை ராம்பூர்ஹாட்டுக்கு அழைத்து செல்கிறோம். அங்கு, அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்படும், என்று சி.பி.ஐ. அதிகாரிகள் கூறியுள்ளனர்.



# அரசியல் ரீதியாக நான் செயல்படுகிறேனென நிரூபிக்க முடியுமா? என தமிழிசை சவால்

தெலுங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் டெல்லி சென்று பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷா ஆகியோரை சந்தித்து பேசினார். அப்போது தெலுங்கானா நிலைவரம் தொடர்பாக அறிக்கை ஒன்றையும் அவர் சமர்ப்பித்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், தெலுங்கானாவில் போதைப் பொருள்கள் பயன்பாடு அதிகளவில் உள்ளது. அதை தடுப்பதற்கு மாநில அரசு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு தாய் என்ற முறையில் எனக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது.

இதை அறிந்த பிரதமரும், உள்துறை மந்திரியும் கடும் அதிர்ச்சி தெரிவித்தனர். போதைப்பொருள்களை தடுக்கும் விடயத்தில் மாநில அரசு தீவிர கவனம் செலுத்தாமல் சில சோதனைகளை மட்டும் நடத்தி விட்டு, விடுகிறார்கள். இந்த நிலைமாற வேண்டும்.

தெலுங்கானா மாநில அரசு ஆளுநர் மாளிகையை தொடர்ந்து அவமரியாதை செய்து வருகிறது. தெலுங்கானா முதலமைச்சர் சந்திர சேகரராவை நான் எனது சகோதரர் போலவே கருதுகிறேன். ஆனால், அவர் அப்படி நடந்துகொள்வதில்லை. எனது தாய் மரணம் அடைந்த சமயத்தில் கூட அவர் ஆளுநர் மாளிகைக்கு வந்து எனக்கு ஆறுதல் சொன்னது கிடையாது. அதற்காக நான் அவர்கள் மீது எந்த கோபமோ, அதிருப்தியோ கொண்டது கிடையாது.

கருணாநிதி, ஜெயலலிதா, மம்தா பானர்ஜி உள்ளிட்ட பல்வேறு முதலமைச்சர்கள் ஆளுநர்களுடன் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் ஒருபோதும் ஆளுநரை அவமதித்ததில்லை. அரசு விழாக்களுக்கு தவறாமல் ஆளுநரை அழைப்பார்கள்.

தெலுங்கானா மாநில அரசு எனது மாநில சுற்றுப் பயணத்துக்கு விமான வசதி எதையும் செய்து தருவதில்லை. நான் அங்கு ஆளுநராக பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், மாநிலத்துக்குள் நான் சுற்றுப்பயணம் செல்ல கார் அல்லது ரயிலில் தான் செல்கிறேன்.

எதகிரிகுட்டா ஆலயத்துக்கு நான் சென்றபோது அங்குள்ள அதிகாரி எனக்கு உரிய மரியாதை தரவில்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது என்றாலும் அத்தகைய நடைமுறைகளை நான் ஒருபோதும் கடைப்பிடிப்பதில்லை.

ஆலயப் பயணங்களின்போது நான் அரசியல் செய்கிறேன் என தெலுங்கானா ராஷ்டீரிய சமீதி கட்சி மந்திரிகள் என் மீது குற்றம் சுமத்துகிறார்கள். என்னுடன் நான் பா.ஜ.க. நிர்வாகிகளை அழைத்து சென்றேனா? ஆலயங்களுக்கு செல்லும்போது நான் ஒரு சாதாரண பக்தையாக தான் செல்கிறேன்.

ஒருபோதும் நான் ஆளுநர் என்ற அந்தஸ்துடன் ஆலயங்களுக்கு செல்வதில்லை. ஆலயங்களுக்கு சென்ற நாள்களில் அங்கு நான் பா.ஜ.கவினரை சந்தித்ததை விட தெலுங்கானா கட்சி நிர்வாகிகளைத்தான் அதிகம் சந்தித்து பேசி இருக்கிறேன். இந்த நிலையில் நான் ஆலய வழிபாட்டின்போது அரசியல் செய்தேன் என்பதை அவர்களால் ஆதாரத்துடன் நிரூபித்து காட்ட முடியுமா?

என்னை பொறுத்த வரை நான் எப்போதுமே அரசியல் ரீதியாக சர்ச்சைகள் செய்வதில்லை. அந்த ரீதியில் நான் இதுவரை எந்த கருத்துகளும் வெளியிட்டதில்லை. என்றாலும் எனக்கு எதிராக தொடர்ந்து குற்றம் சுமத்துகிறார்கள், என்று தமிழிசை தெரிவித்திருக்கிறார்.

# கிழக்கு மாகாணத்தின் செலவுகளை நிலை சீராகும் வரை குறையுங்கள்!

## ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவு



(ஹஸ்பர்)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை கிழக்கு மாகாண சபையின் நிதிச் செலவுகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறைக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாண மக்களும் அதே பிரச்சினைக்குரிய நிலைமையை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், மாகாண சபைக்குச் சொந்தமான அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மாகாணத்தில் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல், அத்தியாவசியமற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், புதிய பொருள்களை வாங்குதல், முன்னர் திட்டமிட்டு மதிப்பிடப்பட்ட போதிலும் இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறு ஆளுநர் மேலும் பணித்தார்.

அதன்படி, மாகாணத்தில் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களைஅச்சிடுதல்,அத்தியாவசியமற்றஉத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், புதிய பொருள்களை வாங்குதல். முன்னர் திட்டமிட்டு மதிப்பிடப்பட்ட போதிலும் இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறு ஆளுநர் மேலும் பணித்தார்.

# மட்டு. விடுதியில் தங்கியிருந்த இளைஞன்,யுவதி, சிறுமி கைது

மட்டக்களப்பில் உல்லாச விடுதி ஒன்றில் தங்கியிருந்த இளைஞன், யுவதி மற்றும் சிறுமிஒருவர்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 28 வயதுடைய பெண் மற்றும் அவருடைய சகோதரியான 14 வயது சிறுமி ஒருவரும் காணாமல் போயிருந்தனர் எனக் கூறப்பட்டது. பின்னர் விடுதி ஒன்றில் இளைஞருடன் இருந்த நிலையில் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞன் உட்பட மூன்று பேரில் இருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருபவை:–

இந்தப் பகுதியைச் சேர்ந்த திருமணம் முடித்துள்ள 28 வயதுடைய பெண் அவரது சகோதரியான14 வயது சிறுமியை கடந்த செவ்வாய்கிழமை மாலை 5 மணியளவில் தனியார் வகுப்புக்குக் கூட்டிச் சென்ற பின்னர் இரவாகியும் வீடுதிரும்பாமல் இருவரும் காணாமல் போயுள்ளனர் என அவர்களது உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து நாவற்குடா பகுதியிலுள்ள உல்லாச விடுதி ஒன்றை புதன்கிழமை இரவு முற்றுகையிட்டபோது அந்த விடுதி அறையில் 22 வயதுடைய இளைஞன் ஒருவருடன் சிறுமியும் அவரது சகோதரியும் மறைந்து இருந்தமையைக் கண்டுபிடித்து மூவரையும் கைது செய்தனர்.

இந்த இளைஞன் வாழைச்சேனைப்பகுதியைச்சேர்ந்தவர் எனவும், அவருக்கும் திருமணம் முடித்த 28 வயதுடைய பெண்ணுக்கும் முகநூல் ஊடாக அறிமுகமாகிய நிலையில் இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இளைஞன் வெளிநாடு செல்வதற்குப் பணம் தேவை எனப்பெண்ணிடம்கேட்டாராம். அந்தப் பெண்ணும் தனது வீட்டில் இருந்த சகோதரனின் பணத்தைத் திருடியும் தனது தங்க நகைகளை அடகு வைத்தும் அடிக்கடி அந்த இளைஞனுக்குசுமார்4லட்சம்ரூபாவரையில் அனுப்பி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் இளைஞன், அந்தப் பெண்ணிடம் அவரது 14 வயது சிறுமியான சகோதரியையும் கூட்டிவருமாறு அழைத்தாராம். செவ்வாய்க்கிழமை சகோதரியை தனியார் வகுப்புக்குக் கூட்டிச் செல்கிறேன் என தெரிவித்து வீட்டை விட்டு வெளியேறி ஓட்டோ ஒன்றில் மேற்படி விடுதிக்கு இளைஞனுடன் சென்று தங்கி இருந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்ட சிறுமிமருத்துவபரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட இளைஞனையும் பெண்ணையும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களுவாஞ்சிகுடியில் 'சமுர்த்தி அபிமானி' விற்பனைக் கண்காட்சியும் சந்தையும்







(க.கிருபாகரன்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 'சமுர்த்தி அபிமானி 2022' எனும் தொனிப்பொருளில் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய விற்பனைக் கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் நேற்றும், இன்றும் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் எருவில் கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் என்.நிர்மலராஜ், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார் மற்றும் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே. உதயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாரம்பரிய உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளும் வகையில் சமுர்த்திப் பணியாளர்களினால்அவைகாட்சிப்படுத்தப்பட்டு, அப்பொருள்களை விற்பனையும் இடம்பெற்றன.



# 'நிதி அமைச்சர்' சாணக்கியனை வாழ்த்தி கல்லடிப் பாலத்தில் கிண்டல் பதாகை!

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நிதி அமைச்சராக பதவியேற்கவுள்ளார் எனத் தெரிவித்து மட்டக்களப்பு நகரில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி என்ற பெயரில் இந்தப் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் புதிய நிதியமைச்சராக பதவியேற்கவுள்ள இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு வாழ்த்துகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பதாகை பற்றிய செய்தி தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவிவருகின்றது.

இந்த நிலையில் தங்களது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி முறைப்பாடு செய்துள்ளது. முன்னணியின் தலைவர் கி.சேயோன் வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

'இது ஒரு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே. இந்த இழி செயற்பாட்டுக்கும் வாலிபர்முன்னனிக்கும்எந்தத் தொடர்பும் இல்லை' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு வாலிபர் முன்னணி தலைவர் மற்றும் உப தலைவர், சாணக்கியனின் ஒருங்கிணைப்பாளர் தினேஷ் ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடலில் மூழ்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடலில் நண்பர்களுடன் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஆறுமுகத்தான் குடியிருப்பு, காளிகோவில் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய கணேஸ் விமலராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக் காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தால் அது ஜனாதிபதிக்கு பிரச்சினையாக மாறும்!

## எச்சரிக்கின்றார் ரணில்



மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் அது ஜனாதிபதிக்கு பிரச்சினையாக மாறும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த செவ்வியில், பொதுமக்களின் உணர்வுகள் தங்களுக்கு எதிராக மாறியுள்ள போதிலும் இலங்கை ஜனாதிபதியாலும் பிரதமராலும் தொடர்ந்து எவ்வாறு பதவியில் நீடிக்க முடிகின்றது என கேள்வியெழுப்பப்பட்டது.

மேற்படி கேள்விக்கு பதிலளித்த ரணில் –

ஜனாதிபதியைப் பொறுத்தவரை அவர் ஐந்து வருடங்களுக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அதேவேளை அவர் வீட்டிற்குச் செல்லவேண்டும் என ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் வேளை போவதா? இல்லையா? என்பதைத் தீர்மா னிக்கவேண்டியது அவரே.

அவர் தான் பதவி விலகப்போவதில்லை. எனினும் புதிய அமைச்சரவைக்கு தலைமை தாங்கப்போகிறேன் என எமக்குத் தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் இந்திய கடனுதவியின் கீழ் பல பொருள்கள் வரவுள்ளதால் பல விடயங்களுக்குத் தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால்அனைத்துவிடயங்களுக்கும் தீர்வு காணப்படுமா? என்பது எனக்குத் தெரியாது. தொடர்ந்தும் மின்வெட்டு நீடிக்கப்போகின்றது. ஆனால் அவற்றின் காலம் குறையும். நிச்சயம் சில தட்டுப்பாடுகள் காணப்படும்.

பிரதமரை பொறுத்தவரை அவர் தற்போது மிகச்சிறிய பெரும்பான்மையை கொண்டுள்ளார். சுமார் 40 உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளனர். எதிர்க்கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் மூன்று அல்லது நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வித்தியாசமே காணப்படுகின்றது.

அடுத்த சில நாள்களில் அந்த நான்கைந்து பேரும் அரசாங்கத்திலிருந்து விலகுவார்கள். அரசாங்கம் பெரும்பான்மையை இழக்கும் நிலையை ஏற்படுத்துவார்கள் எனப் பலர் கருதுகின்றனர். இதன் பின்னர் என்ன நடக்கும் என்பது வெளிப்படையான விடயம்.

பிரதமர் பதவி என்பது தங்களால் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறமுடி யும் என்பதிலேயே தங்கியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களை உணர்கின்றனர். மேலும் சிலர் விலகினால் தங்களுக்கு பெரும்பான்மை இல்லை என அவர்கள் உணர்கின்றனர்.

அதேவேளை எதிர்க்கட்சி என்பது தனியொரு கட்சியில்லை. பல குழுக்கள் உள்ளன. தேவையான 113 பெறவேண்டும். மாற்று அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றால் அவர்கள் ஐக்கியப்பட வேண்டும்– ஒன்றிணைய வேண்டும்.

ஜனாதிபதியை பொறுத்தவரை அவர்கள் மக்களின் மனோநிலையை அவதானிக்க வேண்டும். மக்கள் தான் சொல்வதை ஏற்கப் போகின்றார்களா? அல்லது அவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போகின்றார்களா? என்பதை அவர் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். அவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் அது அவருக்கு பிரச்சினையாக மாறும். – என மேலும் தெரிவித்தார்.

மேலும் இதன்போது, ஆர்ப்பாட்டத்தின் அளவு உங்களை ஆச்சரியப்படுத்தியுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், ‘இவ்வாறான ஆர்ப்பாட்டம் மே, ஜுன் மாதத்திலேயே இடம்பெறும் என எதிர்பார்த்தேன். முன்கூட்டியே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றமை தொடர்பாக நான் ஆச்சரியமடைந்தேன். ஆனால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உருவாகிக்கொண்டிருந்தது. மின்சாரம் 13 மணித்தியாலங்கள் துண்டிக்கப்பட்டால், பிள்ளைகளால் படிக்க முடியாவிட்டால், பரீட்சை எழுதுவதற்கு பேப்பர் இல்லாவிட்டால், வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை. ஆகவே ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சிலர் இரண்டுநேரம் மாத்திரம் உண்கின்றனர். இலங்கையர்கள் மூன்று நேரம் உணவுண்டவர்கள். விலைகள் அதிகரிக்கின்றன, பணவீக்கம் அதிகரிக்கின்றது. ஆகவே இந்த பிரச்சினைகள் அனைத்தும் அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்பியுள்ளன. –எனத் தெரிவித்தார்.

# ஜனாதிபதியும் ராஜபக்ஷ குடும்பமும் ஆட்சியிலிருந்து வெளியேறவேண்டும்

## அஜித் மானப்பெரும கோரிக்கை



ஜனாதிபதி பதவி விலகி ராஜபக்ஷ குடும்பமும் ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும கேட்டுக்கொண்டார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் –

இந்த நாடு நன்றாகவே இருந்தது. மக்கள் கடந்த காலங் களில் வரிசையில் இருக்கவில்லை.

இந்நிலையில் மக்களின் பேச்சை அரசாங்கம் செவிமடுக்காத காரணத்தினாலேயே இந்த விளைவு ஏற்பட்டது. உரப்பிரச்சினை, ஆசிரியர்களின் பிரச்சினை என்பவற்றில் மக்களின் குரலை அரசாங்கம் கேட்கவில்லை.

தற்போது மக்கள், ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறு கூறுகிறார்கள். இதனையேனும் அரசாங்கம் செவிமடுக்க வேண்டும். அரசாங்கம் அவ்வாறு கேட்டால், இந்த நாட்டை கட்டியெழுப்ப ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவே இருக்கிறோம்.

ஆனால், ஜனாதிபதி பதவி விலகியே ஆகவேண்டும். ராஜபக்ஷ குடும்பமே ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும். அப்படியானால் அவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீட்டு, நாம் ஆட்சி நடத்த தயாராகவே இருக்கிறோம். – எனத் தெரிவித்தார்.





# அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹற்றனில் அரச ஊழியர்கள் போராட்டம்!

அத்தியாவசிய பொருள்களின் விலையுயர்வுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (வெள்ளிக்கிழமை) உணவு ஓய்வு நேர வேளையில் ஹற்றன் பிரதேசத்தில் உள்ள அரச ஊழியர்கள் ஹற்றன் மணிக்கூண்டு கோபுரத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்வித் துறை சார்ந்த ஊழியர்கள், தபால் திணைக்கள ஊழியர்கள், டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் தாதியர்கள், வைத்தியர்கள் சிற்றூழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கல்வி மற்றும் ஏனைய அரச ஊழியர்கள்களின் ஆர்ப்பாட்டம் ஹற்றன் டிக்கோயா நகர சபைக்கு முன்பாக ஆரம்பித்தது. ஆர்ப்பாட்டகாரர்கள் உலகத்தின் முன் தாய் நாட்டை கேவலமாக்காதே, பசிக்கு நிறம், மதம் கிடையாது, விலை குறை, அடுத்த தலைமுறை வாழ வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை காட்சிப்படுத்திய வண்ணம், ஊர்வலமாக வந்து மணிக்கூண்டு கோபுரத்தின் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் டீசல் இல்லை, கவலைக்கிடமான நிலையில் இலவச சுகாதார சேவை, சுகாதார சேவையைப் பாதுகாப்போம், பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாப்போம். போன்ற வாசகங்கள் எழுத்திய சுலோக அட் டைகளை ஏந்திய வண்ணம், கோஷமிட்டனர்.

# பனை அபிவிருத்தி சபையால் சைக்கிள்கள் வழங்கிவைப்பு!

பனை அபிவிருத்தி சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார உதவித் திட்டம் – 2021 இன் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கள் மற்றும் பதநீர் உற்பத்தியாளர்களுக்கான சைக்கிள்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 08 சங்கங்களை உள்ளடக்கியதாக 137 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) எஸ்.குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் கே.லிங்கேஸ்வரன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் மாவட்ட இணைப்பாளர் இ. குணசீலன் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக இணைப்பாளர் க. புஸ்பமநோகரன், பனை அபிவிருத்தி சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் ஆர்.சசிக்குமார் மற்றும் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சங்கங்களின் அங்கத்தவர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி யாழ். கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் 500 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2022இல் வெளியிடப்பெற்றது.